பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 10 2024 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலக தொலைத்தொடர்பு தரப்படுத்துதல் கூட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கிவைக்கிறார்.

2. இந்தியா குறித்து கனடா பிரதமர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களையடுத்து, கனடா தூதரக அதிகாரிகள் ஆறு பேரை வெளியேறுமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

3. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று இஸ்லாமாபாத் புறப்படுகிறார்.

4. ஜம்மு காஷ்மீரில் ஆட்சி அமைக்குமாறு, ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவர் திரு ஒமர் அப்துல்லாவிற்கு, துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா அழைப்பு விடுத்துள்ளார்.

5. டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>**

உலக தொலைத்தொடர்பு தரப்படுத்துதல் கூட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கிவைக்கிறார்.

தொலைத்தொடர்பு, டிஜிட்டல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்துறைகளை சேர்ந்த 190-க்கும் மேற்பட்ட நாடுகளின் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவு, 6-ஜி போன்ற முக்கிய தொழில்நுட்பங்களின் தரநிலைகள் பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்திய புத்தொழில் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அறிவுசார் சொத்துரிமை, நீடித்த அத்தியாவசிய காப்புரிமை ஆகியவை குறித்து முக்கிய விளக்கங்களை பெறவுள்ளனர்.

இக்கூட்டத்தில் இந்திய மொபைல் மாநாட்டிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 400-க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள், சுமார் தொள்ளாயிரம் புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

<<<<<>>>>>

இந்திய காவல் பணி பயிற்சி அதிகாரிகளுடன், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுதில்லியில் உரையாடுகிறார்.

அப்போது பயிற்சி அதிகாரிகள் தங்களது பயிற்சி அனுபவங்களை அவருடன் பகிர்ந்துகொள்கின்றனர.

நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான சவால்களை எதிர்கொள்வது தொடர்பான வழிகாட்டுதல்களை திரு அமித் ஷா அதிகாரிகளுக்கு அளிக்க உள்ளார்.

54 பெண் அதிகாரிகள் உட்பட மொத்தம் 188 அதிகாரிகள் இந்த உரையாடலில் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று இஸ்லாமாபாத் புறப்படுகிறார்.

இரண்டு நாட்கள் பயணம் மேற்கொள்ளும் அவர், பல்வேறு நாடுகள் பங்கேற்கும் நிகழ்வு என்பதால், தாம் அதில் கலந்துகொள்வதாக கூறியுள்ளார்.

அப்போது இருதரப்பு பேச்சுக்கள் எதுவும் நடைபெறாது என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்திய வெளியறவு அமைச்சர் ஒருவர் முதல் முறையாக இஸ்லாமாபாத் செல்கிறார்.

<<<<<>>>>>

இந்தியா குறித்து கனடா பிரதமர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களையடுத்து, இந்திய தூதரக அதிகாரிகளை திரும்பப்பெறுவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது

இதுதொடர்பாக, புதுதில்லியில் உள்ள கனடா நாட்டு தூதரக அதிகாரிகளை வெளியுறவு அமைச்சகம் அழைத்து விளக்கம் அளித்தது.

கனடாவில் உள்ள இந்திய தூதர் மற்றும் அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அவர்களுக்கான பாதுகாப்பில் நம்பிக்கை இல்லை என்றும் கூறியுள்ளது.

இதற்கிடையே, இந்தியாவில் உள்ள கனடா நாட்டு தூதர் **Stewart Ross Wheeler** உள்ளிட்ட ஆறு அதிகாரிகளை இம்மாதம் 19-ஆம் தேதிக்குள் வெளியேறுமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் ஆட்சி அமைக்குமாறு, ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவர் திரு ஒமர் அப்துல்லாவிற்கு, துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ஆம் ஆத்மி மற்றும் பல்வேறு சுயேட்சை உறுப்பினர்கள், ஒமர் அப்துல்லா ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு கடிதம் அளித்ததையடுத்து ஆளுநர் இம்முடிவு மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து, நாளை காலை திரு ஒமர் அப்துல்லா முதலமைச்சராக பதவியேற்கிறார்.

<<<<<>>>>>

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கடந்த மாதம் சிறை பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 51 மீனவர்கள் நேற்றிரவு கொழும்பில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.

புதுக்கோட்டை, மயிலாடுதுறை, ராமேஸ்வரம் பகுதிகளை சேர்ந்த இந்த மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளிடம் பேச்சுக்கள் நடத்தினர்.

அதைத்தொடர்ந்து, இலங்கை நீதிமன்றம் தமிழக மீனவர்களை விடுவித்து இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் அவர்களை இந்திய அதிகாரிகள் நேற்று சென்னை அனுப்பிவைத்தனர்.

சென்னை விமான நிலையம் வந்தடைந்த மீனவர்கள் அனைவரும் அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதால் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், திருவாரூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, சிவகங்கை, சேலம், ஆகிய மாவட்டங்களில் கனமுதல், மிககனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

கனமழை எச்சரிக்கையையடுத்து, அப்பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது.

மழை தொடர்பான புகார்கள் மற்றும் மீட்புப்பணிகள் தொடர்பாக, பொதுமக்கள் 1 9 1 3 என்ற உதவி எண்ணில் தெரிவிக்கலாம் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

அத்துடன், கட்டுப்பாட்டு அறையில் உள்ள 0 4 4 – 2 5 6 1 9 2 0 4 மற்றும் 0 4 4 – 2 5 6 1 9 2 0 6 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டும் புகார் அளிக்கலாம் என்று கூறியுள்ளது.

**chennaicorporation.gov.in** என்ற இணையதளம், **“**நம்ம சென்னை**”** செயலி, **‘Greater Chennai Corporation Facebook, ’ @chennaicorp** என்ற இன்ஸ்ட்ராகிராம், **‘@chennaicorp**

என்ற

**X** செயலி ஆகிய சமூக வலைதளங்கள் வாயிலாக தொடர்புகொண்டு புகார் தெரிவிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளது

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாநில அமைச்சர் திரு காந்தி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

மீட்புப்பணிகளுக்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளதாக செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

*(சவுண்ட் பைட் - காந்தி – 38 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, கன்னியாகுமரி மாவட்ட மலையோரப்பகுதிகளில் பெய்துவரும் கனமழையால், பேச்சிப்பாறை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக உபரிநீர் வெளியேற்றப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - குமார் - 43 செகண்ட்ஸ்)*

மழை காரணமாக, விழுப்புரம் மாவட்டத்தில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பள்ளிகள் மதியம் வரை மட்டும் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

நேற்றிரவு சென்னையில் பரவலாக கனமழை பெய்த நிலையில் தற்போதும் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது.

**<<<<<>>>>>**

தெலங்கானாவில் அரசு வேலைவாய்ப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு ஒரு சதவீதத்தில் இருந்து, நான்கு சதவீதமாக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அனசுயா சீத்தக்கா தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு இணையதளத்தை அவர் தொடங்கிவைத்தார்.

இந்த இணையதளத்தில் பதிவு செய்வோருக்கு தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று கூறினார்.

தனியார் நிறுவனங்களும் குறிப்பிட்ட சதவீத இடஒதுக்கீட்டின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென், சீனாவின் **Guang Zu Lu**-ஐ எதிர்கொள்கிறார்.

மகளிர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து, தைவானின் **Yu Po Pai-**ஐ எதிர்கொள்கிறார்.

---------------

உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில், நியூசிலாந்து அணி 54 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன்மூலம் இந்தியா அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

<<<<<END>>>>>